## சுருக்கம்

அறிவிப்புகள் – சிறுபான்மையினர் நலன் – 2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள 10,583 நபர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குதல் – அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை**

அரசாணை (நிலை) எண். 67 நாள் 18.11.2021

பிலவ, கார்த்திகை 2

திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது :–

1. அரசாணை (நிலை) எண்.74, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை, நாள் 24.08.2009.
2. அரசாணை (நிலை) எண்.84, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை, நாள் 18.09.2009.
3. அரசாணை (நிலை) எண்.48, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந2)த் துறை, நாள் 16.08.2019.
4. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண். அ6/2076/2021, நாள் 16.09.2021

********

ஆணை:–

2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :–

> "உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள 10,583 நபர்களுக்கு மிதிவண்டிகள் 4 கோடியே 76 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்"

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில் உள்ள பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் உலமாக்கள் மற்றும் பணியாளர்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில்

திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்குவது போன்று பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான வழிமுறைகள், இவ்வாரியத்தில் உறுப்பினர்கள் பதிவு செய்வது, நலத்திட்ட உதவியினை பெறுவதற்கான விண்ணப்பிக்கும் முறை குறித்த வழிமுறைகள் மற்றும் படிவங்கள் குறித்தான தொகுப்புகள் வெளியிடப்பட்டன.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடிதத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெற்று 11 மற்றும் 12 வகுப்புகளை சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பள்ளிகள் ஆகியவற்றில் 11-ஆம் வகுப்பு படிக்கும் அனைத்து இனத்தை சேர்ந்த மாணவ / மாணவியருக்கு மிதிவண்டி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், இத்திட்டத்தின் கீழ் 2019-2020 மற்றும் 2020-2021-ஆம் ஆண்டுகளுக்கு தொடர்ந்து செயல்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, தமிழ்நாடு திறந்த வெளி ஒப்பந்தப் புள்ளிச் சட்டம் மற்றும் விதிகளை அனுசரித்து கொள்முதல் குழு மூலமாக ஒரு மிதிவண்டியின் தோராய விலை ரூ.4,500/- (வரிகள் உட்பட) என தெரிய வருவதாகவும், இதனடிப்படையில், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 10,583 உறுப்பினர்களுக்கு (8,383 ஆண்கள், 2,200 பெண்கள்) மிதிவண்டிகள் வழங்கிடலாம் என்றும், இம்மிதிவண்டிகள் வழங்குவதால் மேற்படி வாரியத்தில் பதிவு பெற்றவர்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்து பள்ளிவாசல்கள் / தர்காக்களுக்கு சென்று பணிபுரிய மிகவும் உதவிகரமாக இருக்கும் என்றும், இதனால் அரசுக்கு ரூ.476.23 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

5. மேலும், சிறுபான்மையினர் நல இயக்குநர், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து அடையாள அட்டை பெற்றுள்ள பொருளாதாரத்தில் ஏழ்மை நிலையிலுள்ள இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள் / ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள், தர்காக்கள் மற்றும் அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், அஷீர்கானாக்கள் மற்றும் முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட 10,583 (8383 ஆண்கள், 2200 பெண்கள்) பணியாளர்கள் அனைவரையும் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள பயனாளிகளாக கருதிடலாம் என்றும், உலமா ஓய்வூதியத் (தமிழ்நாடு) திட்டம், 1981-ன் கீழ் ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியத்தின் கீழ் முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்களை மிதிவண்டிகள் வழங்குவதிலிருந்து விலக்களிக்கபட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. மேலும், சிறுபான்மையினர் நல இயக்குநர் மேற்படி செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதியை பெற்று, மிதிவண்டிகளை கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கு வழங்க சிறுபான்மையினர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளித்திடவும், இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதிக்கு சிறுபான்மையினர் நல இயக்குநர் மதிப்பீடு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக நியமித்தும் ஆணை வெளியிடுமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

7. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 10,583 உறுப்பினர்கள் அனைவருக்கும் (முதியோர் ஓய்வூதியம் மற்றும் உலமா ஓய்வூதியம் பெறுவோர் நீங்கலாக) மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் மிதிவண்டிகள் வழங்க ரூ.476.23 இலட்சம் (ரூபாய் நான்கு கோடியே எழுபத்தாறு இலட்சத்து இருபத்து மூன்றாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

8. மேலே பத்தி 7–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 80 – பொது – 800 – ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AE – இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த உலமாக்களுக்கும் மோதினார்களுக்கும் – இலவச மிதிவண்டிகள் வழங்குதல் – 309 – உதவித் தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை".

IFHRMS த.தொ.கு : "2225-80-800-AE-30903"

9. மேலும், பத்தி 7–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினைப் பெற்று, மிதிவண்டிகளை கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கு வழங்க சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது.

10. மேலே பத்தி 7–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப் பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.பொ–I) துறையில் தனியாகப் பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாகக் கணக்கிட்டு, 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A"–யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன் பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்

கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தினை 2021–2022–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய கருத்துருவை நிதித் (பி.மி.பி(ம)சி.ந/வ.செ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு சிறுபான்மையினர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு எண்.50419/பி.மி.பி.(ம)சிந/ 2021, நாள் 18.11.2021–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரடு எண்.859 (எண்ணூற்று ஐம்பத்தொன்பது)

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை – 5.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை – 5.
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவர் மற்றும் அனைத்து அலுவல் சாரா உறுப்பினர்கள் (உலமாக்கள் மற்றம் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்–செயலர் வழியாக)
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
அரசு முதன்மைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, சென்னை – 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை – 9.
அரசு செயலாளர், சமூக நலம் (ம) சத்துணவுத் துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளர், உயர் கல்வித் துறை, சென்னை – 9.
ஆணையர், தொழிலாளர் நலத்துறை, சென்னை – 6.
முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை–1.
இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சென்னை – 2.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை–I&II) சென்னை–18.

<u>நகல் :–</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மைத் தனிச் செயலர், சென்னை–9.

நிதி(வரவு–செலவு/பொது I, II/பி.மி.பி/வ.வ. I) துறை, சென்னை–9.

இருப்புக் கோப்பு/உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/11/2024

பிரிவு அலுவலர்

18/11/2024